**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 296/2018**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 21.08.2025 | தகப்பனார் பெயர்: | முகமது அலி |
| பெயர்: | அபிபுல்லா<br>(PW–1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | அரசூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 65/2025 |

**முதல் விசாரணை : 21.08.2025**

நான் இவ்வழக்கின் வாதியின் முதல்வராவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 26.04.1978 தேதியிட்ட மைமூன் பீவி கிரயம் வாங்கிய கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 10.12.1986 தேதியிட்ட மைமூன் பீவியிடமிருந்து சாரா பேகம் என்பவர் கிரயம் வாங்கிய கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 06.09.1994 தேதியிட்ட மைமூன் பீவியிடமிருந்து நான் கிரயம் வாங்கிய கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 11.07.2018 தேதியிட்ட எனது வழக்கறிஞர் மூலமான 3,4,5,6 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்

5. மேற்படி அறிவிப்பை 4,5,6 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் (எண்ணிக்கை 5) அசல் **வா.சா.ஆ.5** ஆகவும்

6. 20.07.2018 தேதியிட்ட 3ம் பிரதிவாதியிடமிருந்து பெறப்பட்ட குறிப்பாணை அசல் **வா.சா.ஆ.6** ஆகவும்

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.